ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2135/69 - 2019 අගෝස්තු මස 10 වැනි සෙනසුරාදා - 2019.08.10

*2135/69 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டம்**

*12 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழான கட்டளை*

*மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில்கள், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்புகள் அமைச்சு, பொது நிர்வாக, அனர்த்தங்கள் முகாமைத்துவ மற்றும் கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சு, உள்துறை, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு, சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு, மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுக்களின் அமைச்சர்களினதும், சுற்றாடல் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண சபையின் பொருத்தமான அமைச்சர்கள் ஆகியோரினதும் ஆலோசனையுடன், 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினது (1) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களைப் பிரயோகித்து, மேற்குறித்த சட்டத்தினது நோக்கத்தின் நிமித்தம் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட நிலங்களை, மட்டக்களப்பு மாவட்டத்தில் சக்தி அபிவிருத்திப் பிரதேசங்களாக, மின்வலு, சக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சராகிய ரவி கருணாநாயக்க ஆகிய நான் இத்தால் கட்டளையிட்டுப் பிரகடனப்படுத்துகின்றேன்.*

ரவி கருணாநாயக்க,  
*மின்வலு, சக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சர்.*

*மின்வலு, சக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சு,*  
*இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,*  
*கொழும்பு 07,*  
*2019, ஓகத்து 07.*

1A – G 30715 – 67 (2019/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*சக்தி அபிவிருத்திப் பிரதேசங்கள் - சூரிய சக்தி*

**மட்டக்களப்பு மாவட்டம்**

I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளினுள் அமைந்திருக்கின்ற சகல நிலப் பரப்புகளும், III ஆம் நிரலில் ஹெக்டேயர்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அளவை உள்ளடக்கியிருக்கின்ற அதையொத்த இணையான II ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைப்புகளினால் எல்லைகள் குறிக்கப்பட்டிருக்கின்ற அந்தக் காணிகளுக்கு அருகில் அமைந்துள்ள நீர் நிலைகள் அனைத்தும்.

| விடய இல. | நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|---|
| 01. | கோரளைப்பற்று<br>(வடக்கு) | 280667 E, 308019 N<br>280038 E, 309284 N<br>280667 E, 309374 N<br>281211 E, 308232 N | 80.00 |

08-957/1

---

**2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டம்**

*12 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழான கட்டளை*

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில்கள், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்புகள் அமைச்சு, பொது நிர்வாக, அனர்த்தங்கள் முகாமைத்துவ மற்றும் கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சு, உள்துறை, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு, சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு, மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுக்களின் அமைச்சர்களினதும், சுற்றாடல் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ள ஊவா மாகாண சபையின் உரிய அமைச்சர்கள் ஆகியோரினதும் ஆலோசனையுடன், 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களைப் பிரயோகித்து, மேற்குறித்த சட்டத்தினது நோக்கத்தின் நிமித்தம் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட நிலங்களை, மொணராகலை மாவட்டத்தில் சக்தி அபிவிருத்திப் பிரதேசங்களாக, மின்வலு, சக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சராகிய ரவி கருணாநாயக்க ஆகிய நான், இத்தால் கட்டளையிட்டுப் பிரகடனப்படுத்துகின்றேன்.

ரவி கருணாநாயக்க,
மின்வலு, சக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சர்.

மின்வலு, சக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சு,
இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,
கொழும்பு 07,
2019, ஓகத்து 07.

**அட்டவணை**

சக்தி அபிவிருத்திப் பிரதேசங்கள் - சூரிய சக்தி

**மொணராகலை மாவட்டம்**

I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளினுள் அமைந்திருக்கின்ற சகல நிலப் பரப்புகளும், III ஆம் நிரலில் ஹெக்டேயர்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அளவை உள்ளடக்கியிருக்கின்ற அதையொத்த இணையான II ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைப்புகளினால் எல்லைகள் குறிக்கப்பட்டிருக்கின்ற அந்தக் காணிகளுக்கு அருகில் அமைந்துள்ள நீர் நிலைகள் அனைத்தும்.

| விடய இல. | நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|---|
| 01. | சியம்பலாண்டுவ | 279835 E, 173721 N<br>281184 E, 173442 N<br>281847 E, 172859 N<br>280687 E, 171375 N<br>278866 E, 171972 N | 417.00 |

08-957/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.